முருகப்பெருமான் துணை

**மகான் பிருகுமகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.03.2024**, வெள்ளிக்கிழமை

1. அவலம் அவலம் அகிலமெங்கும் அவலம்
அழிவை நோக்கியே பயணமாக
அகிலம் எங்கிலும் அவலம் கூடிட
அமைதி காப்பது ஏனப்பா
2. அப்பனே அரங்கா முருகா
அவதார மகிமை உலகுக்கு உணர்த்தி
காப்பாக வந்தருள்வாய் எனவேண்டி
கண்டுரைப்பேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை பிருகுமகரிஷி யானும்
அச்சமற சோபகிருது சேல்திங்கள்
ஆசிதனை நவதிகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 09ம் நாள், 22.03.2024, வெள்ளிக்கிழமை)
அறிவிப்பேன் உலகநலம் வேண்டி
4. வேண்டியே ஞானியர்கள் படை
வேலவன் சக்தி ஆணைப்படி
தொண்டென பிரணவக்குடிலில் இறங்கி
தொடர் சேவை ஆற்றிவர
5. வருகின்ற காலம் ஞானவான்கள்
வையகம் முழுக்க வளர்ந்து
தருமமே தழைக்க நல்லாட்சி
தலைவன் முருகனே ஆசிதரும்
6. ஆசிதரும் ஞானஆட்சி மலரஇருக்க
ஆனாலும் நடப்பின் கொடுமை
பசிபிணி துன்பம் போல உலகினில்
பாதகம் பெருகி லஞ்சம் லாவண்யம்
7. லாவண்யம் பெருகி கடமை ஆற்றவே
ஊழல் முறைகேடாக மாறி
அவனியும் சுயநலம் கொண்ட
அரக்கர்கள் பிடியாக மாறி

8. மாறியே கொடுமை மிகுந்துவர
மாற்றம் நிகழாதா எனவேண்டி
ஆறுதல் தேடும் மக்களுக்கு
அபயமென வந்தருள் செய்ய

9. செய்யவே அவதாரம் புரிந்தநல்
சிவராஜ யோகி அரங்கனே
அய்யமற சடுதி வெளிப்பட்டு
அகிலம் காப்பாயப்பா என வேண்டியே

10. வேண்டியே கலியுக மக்கள்
வேண்டி வேண்டி பிரணவக்குடிலை
உண்டான அணுகிப் பணிந்து
உயர்வான தரும சேவைஆற்றி

11. ஆற்றியே சீடர்கள் எனும்
அடையாளம் உலகெலாம் பெருக
மாற்றம் உலகப் பாதுகாப்பாய் மாறும்
மாபாதகங்கள் யாவும் முடிவுறும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—